<u>அசல் வழக்கு எண் 82/2013</u>

நாள் 29.07.2019

**Name: வேளாங்கண்ணி (எ) ஆரோக்கியசாமி (பி.வா.சா.1)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**</u>

எனனுடைய தகப்பனார் பெயர் சின்னு (எ) சின்னப்பன். எனது தாத்தா பெயர் எனக்குத் தெரியாது. வாதியின் தந்தை தாவீது என்பவர் 8.10.1956ல் சர்வே எண்.202/1-1 ஏக்கர் 71 சென்டில் கீழ்மேல் காலடி 30, தென்வடல் காலடி 175 உள்ள இடத்தை கிரையம் வாங்கிய விபரம் எனக்குத் தெரியாது. அந்த கிரையப் பத்திரத்தில் நான்கெல்லையில் வண்டிப்பாதைக்கு வடக்கு, சவரி மனைக்கு கிழக்கு, சவரிமுத்து வாத்தியார் நிலத்திற்கு தெற்கு, சின்னு கிரைய மனைக்கு மேற்கு என்று குறிப்பிட்டுள்ள விபரம் எனக்குத் தெரியாது. அந்த கிரையப் பத்திரத்தில் என் தகப்பனார் சாட்சி கையொப்பம் போட்டுள்ள விபரம் எனக்குத் தெரியாது. வாதியின் தந்தை தாவீதுக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அதில் மூத்தவர் பெயர் சூசை (எ) சின்னப்பன். வாதி இரண்டாவது மகனாவார். இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.30/1991 என்ற வழக்கை வாதி மற்றும் அவரது அண்ணன் பெயரிலும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பிற்கு எதிராக அரியலூர் சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.62/1994 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எ1, பி1, இ1, எப்1 வழியாக எதிர்வாதிகளோ, அவருடைய ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யாதிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் அந்த பகுதி எனக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ2 ஆவணத்தில் எனக்கு சொந்தமானது என்று தீர்ப்பாகவில்லை என்றால் சரியல்ல. நான் வாதி மற்றும் அவரது அண்ணன் பெயரில் சமூகம் நீதிமன்றத்தில் நிறைவேற்று எண்.48/2004 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த தள்ளுபடி உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு எண்.1470/2005 அதன் பல்வகை மனு எண்.12918/2005 என்ற எண்ணில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருடன் பிறந்தவர்கள் இரண்டு பேர்

ஆவார். எனது பெரியப்பா பெயர் ஆரோக்கியம். எனது பெரியப்பாவிற்கு குழந்தைகள் இல்லை. எனது பெரியப்பா, எனது அப்பா கிரையம் வாங்கிய விபரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்து எனது அப்பாவின் அப்பா சம்பாதித்து வாங்கியதாகும். என்னுடன் கூடப்பிறந்தவர்கள் எனது தம்பி மற்றும் நான்கு பெண்கள் ஆவார்கள். தாவா சொத்தை எனது தம்பிக்கு கிழக்கும், எனக்கு மேற்கு பக்கமாகவும் பிரித்துக் கொண்டோம். எனது பெரியப்பா கிரையம் வாங்கியதாக எந்த பத்திரமும் தாக்கல் செய்யவில்லை. அந்த கிரையப் பத்திர விபரம் எனக்குத் தெரியாது. எனது பெரியப்பா எவ்வித கிரையமும் எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை. நானும், எனது தம்பியும் பாகம் பிரித்ததின் அடிப்படையில் எனது பாகத்தை எனது மகனுக்கு தானசெட்டில்மெண்டாக எழுதி வைத்தேன். நானும், எனது தம்பியும் பாகம் பிரித்ததற்கு பத்திரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாய்மொழியாகதான் பாகம் பிரித்துக்கொண்டோம். வாதி கிரையப் பத்திரம் பற்றி எனக்குத் தெரியாது. கீழ்மேல் 30 அடி பிரகாரம் சந்துபோட்டு வீடு கட்டி வருகிறார் என்றால்அதுபற்றி எனக்குத் தெரியாது. ரோட்டிற்கு வடபுறம் வாதியின் அண்ணன் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதிதான் குடியிருந்து வருகிறார். அதன் வடபுற வீட்டில்தான் வாதி குடியிருந்தார் என்றால் சரியல்ல. வாதி அந்த சந்து வழியாகதான் குடியிருக்கும் வீட்டிற்கு சென்று வருகிறார் என்றால் சரியல்ல. தற்சமயம் தாவா சொத்திற்கு மேற்கே வாதியின் அண்ணன் தனியாக இடம் வாங்கி குடியிருந்து வருகிறார் என்றால் எனக்குத் தெரியாது. அவர் இடம் வாங்கியபிறகுதான் வாதி தாவா சொத்தை அவரது அண்ணனுக்க விட்டுகொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தென்புறம் மற்றும் மேற்குபுறம் பார்த்து வாசற்படி உள்ளது. தாவா சொத்து எனக்கு சொந்தமில்லையென்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தப்பட்ட வழக்கு ஏற்கனவே தள்ளுபடியாகிவிட்டதால் வாதிகள் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே தாவாபடி தீர்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- திரு.எம்.பரமசிவம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.